செ.வெ.எண்:27/மே நாள்:24.05.2021

**தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கொரோனா நோய்த்தொற்று பரவுதலை கட்டுப்படுத்துதல், முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் தளர்வற்ற முழு ஊரடங்கை நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றை கண்காணிக்க ஆலோசனைக் கூட்டம் தமிழக அரசால் நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட கண்காணிப்பு அலுவலர், அரசு முதன்மை செயலாளர் மற்றும் பொருளியல் மற்றும் புள்ளியல் துறை ஆணையர் டாக்டர். அதுல் ஆனந்த் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ச.திவ்யதர்சினி இ.ஆ.ப., முன்னிலையில் நடைபெற்றது.**

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கொரோனா நோய்த்தொற்று பரவுதலை கட்டுப்படுத்துதல், முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் தளர்வற்ற முழு ஊரடங்கை நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றை கண்காணிக்க ஆலோசனைக் கூட்டம் தமிழக அரசால் நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட கண்காணிப்பு அலுவலர், அரசு முதன்மை செயலாளர் மற்றும் பொருளியல் மற்றும் புள்ளியல் துறை ஆணையர் டாக்டர். அதுல் ஆனந்த் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ச.திவ்யதர்சினி இ.ஆ.ப., முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர், அரசு முதன்மை செயலாளர் மற்றும் பொருளியல் மற்றும் புள்ளியல் துறை ஆணையர் டாக்டர். அதுல் ஆனந்த் இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி தற்போது தமிழ்நாட்டில் தளர்வற்ற முழு ஊரடங்கு நடைமுறையில் உள்ளது. தருமபுரி மாவட்டத்திலும் தளர்வற்ற முழு ஊரடங்கு நடைமுறைப்படுத்தி கண்காணிக்கபடுகிறது தருமபுரி மாவட்டத்தில் கோவிட்-19 நடவடிக்கையாக 2079 படுக்கை வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தருமபுரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 1030 படுக்கை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் 411 ஆக்சிஜனுடன் கூடிய படுக்கை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 200 ஆக்சிஜன் படுக்கை வசதிகள் அமைக்க தற்போது போர்க்கால அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. ஒரு வார காலத்திற்குள் நிறைவுபெறும். மினி கிளிக்களுக்கு 45 மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் விரைவில் நியமிக்கபடுவார்கள்.

மேலும் 108 ஆம்புலன்ஸ் 23 வாகனமும், கர்ப்பிணி தாய்மார்கள் ஆம்புலன்ஸ் 6 வாகனமும் 33 ஆம்புலன்ஸ்கள் மருத்துவத் தேவைகளுக்காக தயார் நிலையில் உள்ளது. தருமபுரி மாவட்டத்தில் ஜெயம் கல்லூரி, செட்டிகரை அரசு பொறியியல் கல்லூரி மற்றும் கடத்தூர் பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி ஆகிய இடங்களில் 1000 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. செவிலியர்கள், ஆய்வக நூட்பனர்கள் தேவைக்கு ஏற்ப நியமனம் செய்து கொள்ளலாம். கொரோனா தடுப்பு மருந்து செலுத்தும் முகாம்களை தீவிரப்படுத்தி தடுப்பூசி செலுத்தும் பணி விரைவுபடுத்த வேண்டும். இதில் சித்தா மற்றும் இயற்கை மருத்துவ துறை சார்பில் சிறப்பு கோவிட் மையம் 100 படுக்கை வசதியுடன்

ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவர்களுக்கு யோகா பயிற்சி, மூச்சுப் பயிற்சி போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது தருமபுரி மாவட்டத்தில் முழு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளதால் பொதுமக்களுக்கு காய்கறிகள், மளிகைப்பொருட்கள், பழங்கள், தங்குதடையின்றி கிடைக்க ஏதுவாக தோட்டக்கலை, வேளாண்மை மற்றும் வேளாண் வணிகத்துறை வாயிலாக நகராட்சி, பேரூராட்சி மற்றும் கிராம ஊராட்சி பகுதிகளில் சுமார் 96 நடமாடும் வாகனங்கள் மூலம் அந்தந்தப் பகுதிகளிலேயே தினமும் காலை 06.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணி வரை விவசாயிகள் உற்பத்தியாளர் குழு (FPG), விவசாயிகள் ஆர்வளர் குழு (குஜபு) மற்றும் உள்ளூர் விவசாயிகள் / வியாபாரிகள் மூலம் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனை கண்காணிக்க மாவட்டம் முழுவதும் 20 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் முழு ஊரடங்கு காலத்தில் தங்கள் பகுதிகளில் நடமாடும் வாகனங்கள் மூலம் விற்பனை செய்யப்படும் காய்கறிகள், மளிகைப்பொருட்கள், பழங்கள் ஆகியவற்றை வாங்கி பயன்படுத்திக்கொள்ள வேண்டும்,

மேலும் தருமபுரி மாவட்டத்தில் கருப்பு பூஞ்சை நோய் தொற்றினால் எவரேனும் பாதிக்கப்பட்டுள்ளார்களா எனவும் அந்த நோய்க்கான மருந்து மாத்திரைகள், இருப்பு உள்ளதா எனவும் கேட்டறிந்தார் ரெம்டிசிவர் மருந்து தற்போது உள்ள இருப்பு குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். தனியார் ஸ்கேன் சென்டர்களை தீவிரமாக கண்காணித்து கொரோனா பரிசோதனையில் பாசிட்டிவ் கண்டறியப்பட்டிருந்தால் அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்தார். வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளவர்களை சுகாதார ஆய்வாளர்கள், செவிலியர்கள், ஊராட்சி செயலாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் காவல் துறையினரால் தீவிரமாக கண்காணிக்கப்பட வேண்டும். தமிழக அரசு கொரோனா பரவுதலை கட்டுப்படுத்த மேற்கொள்ளும் அனைத்து தளர்வற்ற முழு ஊரடங்கு நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும் என மாவட்ட கண்காணிப்பு அலுவலர், அரசு முதன்மை செயலாளர் மற்றும் பொருளியல் மற்றும் புள்ளியல் துறை ஆணையர் டாக்டர். அதுல் ஆனந்த் இ.ஆ.ப., அவர்கள் பேசினார்

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ராமமூர்த்தி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திருமதி.கவிதா, அரூர் கோட்டாட்சியர் திரு.முத்தையன், தருமபுரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.அமுதவள்ளி,இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) மரு.திலகம், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.பூ.இரா.ஜெமினி, கண்காணிப்பாளர் மரு.சிவக்குமார், சித்தா அலுவலர் மரு.கிருஷ்ணாமுர்த்தி, உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**